தமிழ் நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
மற்றும் இந்திய வானிலைத் துறை இணைந்து வழங்கும்
வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகள் - காஞ்சிபுரம் & செங்கல்பட்டு மாவட்டம்
வேளாண் அறிவியல் நிலையம் – காஞ்சிபுரம்.
(02.07.2022 முதல் 06.07.2022, 8.30 மணி வரை )

**அறிக்கை எண் 052/ கே.வி.கே/கே.பி.எம்/2022** *நாள்* & **தேதி**: வெள்ளிக்கிழமை & 01.07.2022

**வானிலை முன்னறிவிப்பு** (02.07.2022 முதல் 06.07.2022, 8.30 மணி வரை)

| | 02.07.2022 | 03.07.2022 | 04.07.2022 | 05.07.2022 | 06.07.2022 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ.) | **03** | **15** | **02** | **02** | **02** |
| அ.வெப்பநிலை | 36 | 37 | 35 | 36 | 36 |
| கு. வெப்பநிலை | 25 | 25 | 26 | 26 | 26 |
| ஒப்புஈரப்பதம் I | 70 | 70 | 70 | 70 | 70 |
| ஒப்புஈரப்பதம் II | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின்வேகம் (கி.மீ/மணி) | 06 | 08 | 08 | 08 | 08 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |
| மேக மூட்டம் | பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படலாம் | பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படலாம் | பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படலாம் | பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படலாம் | பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படலாம் |

**வானிலை முன்னறிவிப்பு தகவல்கள்**: காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டதைப் பொறுத்தவரையில், அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கும் மிக லேசானது முதல் மிதமானது வரை மழைக்கு வாய்ப்புள்ளது. வெப்பநிலை அதிகபட்சமாக 35-37 டிகிரி செல்சியஸ் வரையும் குறைந்தபட்சமாக 25-26 டிகிரி செல்சியஸ் வரையும் பதிவாக்கலாம். மேலும் காற்றானது மணிக்கு 06-08 கி.மீ. வேகத்தில் மேற்கு திசையில் வீசலாம். காற்றின் ஈரப்பதமானது 50-70% வரை பதிவாகலாம். வானம் பகலில் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படலாம். **பொது அறிவிப்பு**: வரும் 06.07.2022 - 12.07.2022 தமிழ் நாடு மற்றும் புதுவையைப் பொறுத்தவரையில் மழையானது இயல்பை விட குறைவாகவும், குறைந்த மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பான அளவு பதிவாகலாம்.

## வானிலை சர்ந்த வேளாண் ஆலோசனைகள்

| பயிர் | பருவம் | ஆலோசனைகள் |
|---|---|---|
| பொது அறிவிப்பு | | வரும் நாட்களில் விவசாயிகள் பூச்சி, பூஞ்சாணகொல்லி மருந்துகள் தெளிப்பு நடவடிக்கையை தள்ளி வைக்கலாம். |
| குறுந்செய்தி | | 02.07.2022 அன்று செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. |
| பயிர் - நெல் | நடவு வயல் | நெல் நடவு செய்யும் விவசாயிகள் மழை முன்னறிவிப்பை கருத்தில் கொண்டு நெல் நடவு வயலை தயார் செய்து கொள்ளலாம். |
| கரும்பு | வளர்ச்சி வருவம் | கரும்பு பயிரில் தொகை உரித்து விட்டம் கட்டி வைப்பதினால் கருப்பு முளைப்பது மற்றும் சாய்வதினை தவிர்க்கலாம். |
| மிளகாய் | நாற்றங்கால் | வரும் நாட்களில் மழைக்கு வாய்ப்புள்ளதால் விவசாயிகள் காய்கறிப் பயிர்களில் தேங்கும் அதிகப்படியான மழை நீரை வடிக்க போதிய வடிகால் வசதி செய்து கொள்ளவும். |
| வெண்டை | காய்க்கும் பருவம் | வெண்டை பயிரை காய்ப்புழு தாக்க வாய்ப்புள்ளதால் பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயிகள் இனக்கவர்ச்சிப்பொறி ஏக்கருக்கு 5 என்றளவில் வைத்து கட்டுப்படுத்தலாம். |
| கத்தரி | நாற்றங்கால் | நிலவும் வானிலை கத்தரி நாற்றங்காலில் அழுகல் நோயை ஏற்படுத்தலாம் என்பதால் அதனை கட்டுப்படுத்த சூடோமோனாஸ் |

| | | |
|---|---|---|
| | | ஃப்ளோரசன்ஸை 2.5 கிலோ என்ற அளவில் 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து இடலாம். அல்லது நாற்றங்காலில் மேட்டுப்பாத்திகள் அமைத்து அதிகப்படியான நீர் தேங்குவதை தவிர்க்கலாம். |
| கொடி வகைகள் | | கொடி வகைகாய்கறி பயிரில் இலைத்துளைப்பான் பூச்சி தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் தோட்டக்கலை அலுவலரை ஆலோசித்து போதிய பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளலாம். |
| கால்நடை அறிவியல் | கறவை மாடுகள் | எருமை மாடுகளுக்கு வெப்பம் அதிகமுள்ள மதிய வேளைகளில் குளம் குட்டை போன்ற நீர் நிலைகளில் குளிக்க விடலாம். விவசாயிகள் கால்நடைகளுக்கு 30-50 கிராம் தாதுப்பு கலவையை தீவனத்துடன் கலந்தளிப்பதால் கால்நடைகளின் உற்பத்தியை மேம்படுத்தலாம். |
| | செம்மறி மற்றும் வெள்ளாடு | விவசாயிகள் ஆடுகளுக்கு சத்தான சமசீர் தீவனங்களை அளிப்பதினால் வளர்ச்சி மற்றும் உற்பத்தியை பெருக்கலாம் . மேலும் ஆடுகளுக்கு சுத்தமான நீர் (அ) நீருடன் ஊட்டச்சத்துகளை கலந்து பருக அளிக்கலாம். |
| | கோழி | கோழிகளுக்கு பி-காம்ப்லெக்ஸ் திரவத்தினை குடிநீருடன் கலந்து அளிப்பதால் வெப்ப தாக்க அழற்சியை குறைத்து உற்பத்தியை அதிகரிக்கலாம். விவசாயிகள் மழை நாட்களில் இளம் கோழி குஞ்சுகளுக்கு போதிய அளவு வெப்ப ஊட்டிகள் அமைத்து பாதுகாக்கலாம். |
| மீன்வளம் | உள்நாட்டு மீன் வளர்ப்பு | வரும் ஐந்து நாட்களுக்கு வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்பட வாய்ப்புள்ளதால் மீன் வளர்ப்பு குளங்களில் நுன் பாசிகளின் உற்பத்தியானது பெருக்கம்மடையாமல் நிலைத்து காணப்படும். எனவே மீன் /இறால் குளங்களில் வழக்கமான நீர் மாற்று விகிதத்தை 50%சதவீதமாக குறைப்பதன் மூலம் நுன் பாசிகளின் அடர்த்தி குறையாமல் பாதுகாக்கலாம். மழை முன்னறிவிப்பினை கருத்தில் கொண்டு விவசாயிகள் குளத்தின் நீர் மட்டத்தினை 20-30 சென்டிமீட்டர் வரை குறைக்கலாம். மழை நீர் வடிகால் குளங்களில் களைமீன்கள் மற்றும் இதர மீன்கள் கலந்து வராமலிருக்க நீர்புகு மடைகளில் 5 மி.மீ முதல் 15 மி.மீ வரை அளவுள்ள வலைகளை பொருத்தலாம். மீன் குளத்தில் உள்ள நீர் வெளியேறும் குழாய்களில் மழைக்காலத்தில் நீருடன் மீன் குஞ்சுகள் மற்றும் மீன்கள் வெளியேறுவத்தினை தவிர்க்க வலைகளை அமைக்கலாம். |
| | பொது மீன்கள் | வெப்பநிலை அதிகரித்து காணப்படலாம் என்பதால் விவசாயிகள் மீன்களின் தீவனமிடும் நேரத்தினை காலை 7 மணி மற்றும் மாலை 5 மணிக்கு பின்பு மாற்றிக்கொள்ளலாம். விவசாயிகள் நீரின் கடினத்தன்மை மற்றும் அமோனியா அளவினை கணக்கிட்டு நீர் பரிமாற்றம்/சுண்ணாம்புபோன்றவற்றை பயன்படுத்தலாம். மேலும் விவசாயிகள் மீன் தீவனம் மற்றும் தீவனம் அளிக்கும் விகிதத்தினை தேவைக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளலாம். மீன் / இறால் தீவனதுடன் 1-3% மீன் எண்ணெய் கலந்த வைட்டமின் மற்றும் தாதுக்கள் நிறைந்த தீவனங்களை அளிக்கலாம். |
| இந்த வானிலை சர்ந்த வேளாண் ஆலோசனை தகவல்கள் காஞ்சிபுர வேளாண்மை அறிவியல் நிலையம் தொழில்நுட்ப வல்லுநர்களின் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது. | | |

திட்ட அலுவலர்,
மாவட்ட வானிலை பிரிவு
வேளாண் அறிவியல் நிலையம் –காஞ்சிபுரம்